# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## அசல் வழக்கு எண் 189/2012

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **சரவணன்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **பெரியண்ணன்** | தொழில் | .. | **ஊராட்சி செயலாளர்** |
| வயது | .. | 34 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | **ஏகாபுரம்** | நாள் | .. | 21.11.2022 |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் நாள் திங்கட்கிழமை திரு. சரவணன் த/பெ. பெரியண்ணன் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பு 4 ஆம் சாட்சியின் முதல் விசாரணை.**

நான் தற்போது ஏகாபுரம் ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். கூடுதலாக சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சி செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்த நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அ.புதூர் கிராம ஊராட்சி பதிவேட்டின்படி கதவு எண் 127 ல் யார் குடியிருந்து வருகிறார்கள் என்று ஊராட்சி மன்ற பதிவேட்டில் குறிப்பு இல்லை. கதவு எண் 127/1 நடேசன் த/பெ. பச்சியண்ணன் பெயரில் உள்ளது. கதவு எண் 128 ல் உள்ள வீடு பச்சியண்ணன் த/பெ. கொமரகவுண்டர் பெயரில் உள்ளது. கதவு எண் 128/2 ல் பாலு த/பெ. பச்சியண்ணன் பெயரில் உள்ளது. கதவிலக்க எண் 128/2 ல் 2021-22 பதிவேட்டின்படி பாலு த/பெ. பச்சியண்ணன் பெயரில் உள்ளது. அதற்கு முந்தைய பதிவேட்டை நான் தற்போது நீதிமன்றததிற்கு எடுத்துவரவில்லை. இந்த வருடத்திற்காக வரியை மேற்கண்ட நபர்கள் இதுவரை செலுத்தவில்லை. என்னிடம் காட்டப்படும் வீட்டு வரி ரசீது 2008-2009 ம் ஆண்டிற்கு எங்கள் அலுவலகத்தால் வழங்கப்பட்டதாகும். அது கொமரகவுண்டர் த/பெ. கொழந்தபையன் பெயரில் வழங்கப்பட்டதாகும். அந்த வீட்டு வரி ரசீது **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ரசீதில் பணம் செலுத்தியவர் என்ற இடத்தில் பாலு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கதவு எண் 128/2 என்பது அட்டை வீடாகும்.

கதவு எண் 127/1 என்பதும் அட்டை வீடாகும். கதவு எண் 128 என்பது கூரை வீடாகும்.

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் அ.புதூர் ஊராட்சிக்கு பொறுப்பு அலுவலர் என்றால், சரிதான். நான் ஆவணத்தின்படி மட்டுந்தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். தனிப்பட்ட முறையில் எந்த விபரமும் தெரியாது என்றால், சரிதான். வழக்கு சர்வே எண்ணில் உள்ள வீடுகளின் நிலை குறித்து தனிப்பட்ட முறையில் தெரியுமா என்றால், தெரியாது. அனுபவம் யாரிடம் உள்ளது என்று குறிப்பிட்டு கூறமுடியாது என்றால், சரிதான். கதவிலக்க எண் 127/1, 128, 128/2 ஆகியவைகள் எந்தெந்த சர்வே எண்களில் உள்ளது என்று ஊராட்சி மன்ற பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வா.சா.ஆ.11 ஆவணம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால், சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் வெவ்வேறு வகையில் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். வீட்டு வரி ரசீது அளிக்கும்பொழுது பணம் செலுத்துபவரின் கையெழுத்து வழக்கமாக செலுத்தும்போது வாங்கப்படுமா என்றால், வாங்கப்படும். வா.சா.ஆ.11 ஆவணத்தில் வரி விதிப்பவரின் பெயர் ஒன்றாகவும், வரி செலுத்துபவரின் பெயர் வேறு ஒன்றராகவும் உள்ளது என்றால், சரிதான்.

**மறுவிசாரணை**

பொதுவாக வீட்டு வரி விதிக்கும்பொழுது ஆவணம் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில்தான் விதிக்கப்படும் என்றால், சரிதான்.

ஒப்பம் /சரவணன்

ஒப்பம்/ திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சங்ககிரி.